Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 09 சனிக்கிழமை (24 07-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 238

## ஜனாதிபதி இடம்பெயர் சேவை:

# புலிகளுக்குப் பயந்து டி.பி., ரணில் மட்டு. விஜயத்தைக் கைவிட்டனர்

## படைகளின் பாதுகாப்பில் நம்பிக்கையில்லையாம்

கொழும்பு, ஜூலை 24

நேற்று மட்டக்களப்பில் ஆரம்பமான ஜனாதிபதி இடம்பெயர் சேவையில் பங்கு பற்றுவதற்காக அங்கு செல்லவிருந்த ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், புலிகள் தாக்குதல் நடத்தக்கூடும் எனப் பயந்து தமது விஜயத்தை இறுதி நேரத்தில் கைவிட்டனர்.

நாட்டின் தலைவருக்கு மட்டக்களப்பில் முப்படையினரும் வழங்கக்கூடிய பாதுகாப் புக் குறித்து பாதுகாப்புச் சபை வெளியிட்ட நம்பிக்கையீனத்தை அடுத்தே இம்முடிவு எடுக் கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதியும் பிரதமரும் மட்டக்களப்பு விஜயத்தை மேற்கொள்ளக்கூடாது என்று பாதுகாப்புச் சபை ஆலோ சனை கூறியதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியின்றி, ஜனாதி பதி இடம்பெயர் சேவை நடைபெறுவது வெறும் கேலிக் கூத்து என்று கொழும்பில் செய்தியாளர் ஒருவர் குறிப் பிட்டார்.

பெரும் செலவில் ஏற்பாடு செய்யப்பட்ட ஜனாதிபதி இடம்பெயர் சேவை, ஜனாதி பதி மற்றும் பிரதமர் பங்குபற் றாததால் வெறும் புஸ்வாண

(5 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு

## வீதித் தடைகள், மாற்றங்கள்: காவல்துறை அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 24

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு ஆலயச் சுற்றாட லில் தடைசெய்யப்பட்டிருக் கும் வீதிகளின் விவரங்களை தமிழீழ காவல்துறை பொறுப் பாளர் திரு. பா. நடேசன் வெளியிட்டுள்ளார்.

இவ்வீதிகள் இன்று முதல் அடுத்த மாதம் 18 ஆம் திகதி வரை தினசரி காலை 5 மணி முதல் இரவு 10 மணி வரை தடை செய்யப்பட்டிருக்கும் என அறிவிக்கப்படுகிறது.

வீதிகளும் அவை தடை செய்யப்பட்டிருக்கும் சந்தி களும் வருமாறு:-

★ யாழ் நகரிலிருந்து பருத் தித்துறைக்குச் செல்லும் வீதி ஆனைப்பந்திச் சந்தியுடன்—

★ கந்தர்மடத்திலிருந்து கோயிலுக்குச் செல்லும் அர சடி வீதி, அரசடிச் சந்தியு டன்—

★ கோயில் வீதியில் திரு நெல்வேலி சிவன்கோயில் சந்தி யில்.

★ பருத்தித்துறை வீதியில் யாழ். நகருக்கு வரும் பாதை யில் சங்கிலியன் சிலையுடன்.

இந்த வீதிகள் தடைசெய் யப்பட்டிருப்பதால் பின்வரும் வீதிகளில் போக்குவரத்துச் செய்யலாம் என அறிவிக்கப் பட்டுள்ளது.

★ பருத்தித்துறை — யாழ். வீதிக்குப் பதிலாக கச்சேரி - நல்லூர் வீதி.

(2 ஆம் பக்கம் பார்க்க)

## மாங்குளத்தில் மீண்டும் மக்கள் வங்கிக் கிளை

யாழ்ப்பாணம், ஜூலை 24

மக்கள்வங்கியின் மாங்குளம் கிளை நாளை மறுதினம்முதல் பழைய இடத்தில் செயற்பட விருக்கிறது.

1990ஆம் ஆண்டுக்குப் பின் னர் மாங்குளம் கிளை துணுக் காயில் செயற்பட்டு வந்ததா கவும்—

மீண்டும் மாங்குளத்தில் கிளை நாளை மறுதினம்முதல் செயற்படவிருப்பதாகவும்— மக்கள் வங்கியின் வடபிராந் திய முகாமையாளர் திரு. எஸ். அருளானந்தன் தெரி வித்தார். (உ-3)

## செல்லக்கிளி நினைவாக நேற்று அஞ்சலி நிகழ்வுகள்

லெப்டினன்ட் செல்லக்கிளி அம்மானின் 10 ஆம் ஆண்டு நினைவாக நேற்று திருநெல் வேலி தபாற்பெட்டிச் சந்தி யில் உள்ள நினைவுத்தூபியில் நினைவஞ்சலி நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

விடுதலைப் புலிகள் மூத்த உறுப்பினர் அப்பையா தூபி யில் உள்ள திருவுருவப்படத் துக்கு மலர்மாலை அணிவித் தார். யாழ். மாவட்ட விசேட தளபதி செல்வராசா, மூத்த உறுப்பினர் தேவர் ஆகியோர் மங்கள விளக்கேற்றினர். மூத்த உறுப்பினர் அப்பையா நினைவுரையாற்றினார்.

இதேவேளை—

கல்வியங்காட்டுச் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள செல்லக் கிளியின் உருவப்படத்துக்கு நேற்றுக் காலை 9 மணியள வில் தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரன் மலர்மாலை அணிவித்தார்.

யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி உரையாற்றினார்.

அரியாலையில் உள்ள செல் லக்கிளி குடியேற்றத் திட்டத் திலும் நினைவஞ்சலியும், நினைவுக் கூட்டமும் நடை பெற்றன. (ஓ-3)

## பூநகரிப் பாதை விடயம்:

## எந்த நடவடிக்கையும் இப்போதைக்கு இல்லை!

சங்குப்பிட்டி - பூநகரி ஊடாக பாதுகாப்பான பாதையை திறப்பது குறித்து தற்போது எந்த நடவடிக் கையும் எடுக்கப்படமாட் டாது.

ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக் கோன் இவ்வாறு தெரிவித் தார்.

இப்பாதையைத் திறப்பது பற்றி விடுதலைப் புலிகளுக் கும் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்துக்கும் இடையே நடந்த பேச்சுகள் முறிவ டைந்ததாகத் தெரிவிக்கப் படுவது குறித்து கருத்து வெளியிடுகையில் அவர் இவ் வாறு கூறினார்.

யாழ்ப்பாண மக்களின் நம் பிக்கை தவிடுபொடியாக் கப்பட்டது தமக்கு துயரத் தைத் தந்து இருப்பதாக இலங்கையில் உள்ள ஐ. நா. அகதிகள் தூதரக பாது காப்பு அதிகாரி டாக்டர் பீற்றர் நிக்கலஸ் தெரிவித் தார் என்று "ஐலண்ட்" செய்தி வெளியிட்டுள்ளது. (உ-எ)

## புலிகளுக்கு அதிரடி வெற்றி!

லண்டன், ஜூலை 24

பிரதமர், ஜனாதிபதி ஆகி யோரின் மட்டக்களப்பு விஜ யம் ரத்துச் செய்யப்பட் டமை விடுதலைப் புலிக ளுக்குப் பிரசாரத்தைப் பொறுத்தவரை ஓர் அதிரடி வெற்றியாகும். பி. பி. ஸி கொழும்புச் செய்தியாளர் இவ்வாறு குறிப்பிட்டார். [உ-எ]

## ராணுவத்தின் முயற்சி தோல்வி!

கொழும்பு, ஜூலை 24

ஜனாதிபதியை மட்டக்களப் புக்கு விஜயம் செய்ய வைத்து அதன் மூலம் அப்பிரதேசம் சகஜ நிலைமைக்குத் திரும்பி விட்டது என வெளிஉலகுக்கு காட்டுவதற்கு இராணுவம் எடுத்த முயற்சி தோல்வி யடைந்து விட்டதாக செய்தி யாளர்கள் தெரிவித்தனர்.

ஜனாதிபதியின் விஜயம் ரத் துச் செய்யப்பட்டமையினால் அங்கு நிலவும் உண்மையான நிலை என்னவென்பது புல னாகுகின்றது. இராணுவத்தி னர் குறிப்பிட்டதற்கு மாறா கவே அங்கு சூழ்நிலை காணப் படுகிறது என்பதுநிரூபணமாகி யிருக்கிறது.—இவ்வாறு பி பி ஸியில் குறிப்பிடப்பட்டது.

மட்டக்களப்பு நகரம் எங் கும் ஆயுதம் தரித்த இராணு வத்தினரும் பொலீஸாரும் கடமையில் ஈடுபடுத்தப்பட் டுள்ளனர்; சுமார் 4 ஆயிரம் படையினர் குவிக்கப்பட்டுள்ள னர்; ஹெலிகள் வானத்தில் வட்டமிட்டபடியும், கடற் படைப் படகுகள் மட்டக் களப்பு வாவியிலும், இராணு வம் வீதிகளிலும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள் ளன.

ஆனால் ஜனாதிபதியும் பிர தமரும் மட்டக்களப்புக்கு வர வில்லை.—இவ்வாறு செய்தி யாளர் ஒருவர் குறிப்பிட் டார். [உ-எ-6]

## கொழும்பில் சுவரொட்டி

கொழும்பு, ஜூலை 24

1983 ஜூலை கலவரத்தில் உயிரிழந்த தமிழ்ப் போராளி களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் கொழும்பில் ஒட்டப் பட்டிருந்த சுவரொட்டிகளை பொலீஸார் அப்புறப்படுத்தி னர் என்று தெரிவிக்கப்படு கிறது. (உ-எ)

## படைத் தளபதிகள் சீற்றம்

கொழும்பு, ஜூலை 24

ஜனாதிபதி இடம்பெயர் சேவையில் பங்குபற்றும் தம் களது திட்டத்தை ஜனாதிபதி யும், பிரதமரும் ரத்துச் செய் திருப்பது இராணுவத் தளபதி களை பிரத்தியேகமாக சீற்றம் கொள்ள வைத்திருக்கிறது என பி.பி.ஸி. குறிப்பிட்டது.

இடம்பெயர் சேவையை முன்னிட்டு முப்படையினர் கடந்த ஒரு மாதமாக மட்டக் களப்பில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருந்த னர்.

நான்கு மாத காலத்தின் பின் கிழக்கு மாகாணம் முழு வதிலும் சர்வஜன வாக் கெடுப்பை நடத்தக்கூடியதாக பாதுகாப்பு நிலைமையைத் தாம் சீராக்கிவிடுவர் என கடந்த மாதத்தில்தான் நாடா ளுமன்றத் தெரிவுக் குழுவின் முன்னால் முப்படைத் தளபதி கள் தெரிவித்திருந்தனர்.

அப்படியிருந்தும் —

நாட்டின் தலைவருக்கு மட் டக்களப்பு நகரத்திற்குள்கூட பாதுகாப்பை வழங்க முடி யாத நிலையில்தான் படை யினர் இருக்கிறார்கள் என் பதை ஜனாதிபதியின் விஜயம் ரத்துச் செய்யப்பட்டமை காட்டுகிறது என அவதானி கள் தெரிவித்தனர்.

தங்கள் சக்தியையும் ஆற்ற லையும் ஒருங்கிணைத்து ஜனாதிபதி மற்றும் பிரதம ருக்கு பாதுகாப்பு வழங்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மண்டைதீவு படையினர் சூடு

யாழ்ப்பாணம், ஜூலை 24

மண்டைதீவு - பண்ணை வீதியில் நிலைகொண்டுள்ள ஸ்ரீலங்காப் படையினர் யாழ். நகரப் பக்கமாக அடிக்கடி வேட்டுக்களைத் தீர்த்தவண் ணம் உள்ளனர்.

நேற்று அதிகாலை 12 30 மணியளவில் தொடர்ச்சியாக வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

நேற்றும் திடீர், திடீரென ஷெல் தாக்குதல்கள் நடத்தப் பட்டன. [ஓ-162-15]

## பாதுகாப்பு அமைச்சின் முன் நீண்ட வரிசையில் மக்கள்

மட்டக்களப்பில் நேற்று ஆரம்பமான ஜனாதிபதி இடம்பெயர் சேவையின் போது பாதுகாப்பு அமைச் சின் பணிமனையின் முன் னேயே மக்கள் நீண்ட வரிசை யில் காணப்பட்டனர்.

மட்டக்களப்பில் காணாமற் போன தமது உறவினர்கள் குறித்து ஏதாவது தகவலைப் பெறமுடியுமா என்ற ஆதங் கத்திலேயே அவர்கள் அங்கு கூடியதாகத் தெரிவிக்கப்பட் டது. (உ-6)

## இளாலியில் பாலர் பாடசாலை சேதமானது

தென்மராட்சி, ஜூலை 24

இளாலிக் கடலில் தரித்து நின்ற பீரங்கிப் படகிலிருந்து நேற்றுமுன்தினம் நடத்தப் பட்ட ஷெல் தாக்குதலில் இளாலியிலுள்ள பாலர் பாட சாலை பலத்த சேதமானது.

ஷெல்லின் சிதறல்களினால் பாடசாலைக்கு அருகில் இருக் ... பொருள்களும் சேதமடைந் தன. [ஓ-...]

## மாத இறுதியில் 'வாதுவ' பருத்தித்துறை வரும்

யாழ்ப்பாணம், ஜூலை 24

உணவு மற்றும் அத்தியா வசியப் பொருள்களுடன் 'வாதுவ' கப்பல் எதிர்வரும் 31 ஆம் திகதி பருத்தித் துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்சமயம் கொழும்புத் துறை முகத்தில் 'வாதுவ' கப்பலில் பொருள்கள் ஏற் றும் வேலைகள் நடைபெற்று வருவதாகவும்—

எதிர்வரும் 28 ஆம் திகதி பருத்தித்துறை நோக்கி இக் கப்பல் புறப்படும் என்றும்— நேற்று மாலை தெரிவிக்கப் பட்டது.

இதேவேளை —

பருத்தித்துறையில் மண் எண்ணெய இறக்கி முடித் துவிட்டு 'ருகுணு' கப்பல் நேற்று கொழும்பு நோக்கிப் புறப்பட்டது.

'ஆமண' கப்பலில் பொருள்கள் இறக்கும் வேலைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. [ஓ-3]

## அமெ.வானொலி அஞ்சல் நிலையம்:

## கிராம மக்கள் திரண்டு பாதயாத்திரை நடத்தினர்

சிலாபம் பகுதி இரணவில என்ற இடத்தில் அமெரிக்க வானொலி அஞ்சல் நிலையம் அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து—

அப்பகுதியிலுள்ள கிராமங் களைச் சேர்ந்த மக்கள் பெரும் எண்ணிக்கையில் கூடி நேற்று பாதயாத்திரை ஒன்றை மேற்கொண்டனர்.

நேற்று பாதயாத்திரை சென்ற மக்களை சிலாபம் பொலீஸ் அத்தியட்சகர் (எஸ்- பி.) தலைமையிலான சுமார் 500 பொலீஸார் வழி மறித்தனர்.

இரணவில கிறிஸ்தவ தேவா லயத்துக்குச் சமீபமாகவைத்து பொலீஸார், மக்களை வழி மறித்து அருகிலுள்ள மயா னத்திற்குள் செல்லுமாறு உத் தரவிட்டனர்.

(6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தாம் ஆண்டு நிறைவு நினைவலைகள்



சு. அந்திரேசுப்பிள்ளை
(செல்லத்துரை)
25 — 01 — 1983



அ. விமலதாசன்
24 — 07 — 1983

## ஓர் இலட்சிய மனிதன்

இலட்சியமே உலகை ஆளுகின்றது. உயர்ந்த இலட்சியம் உடையவர்களே உலகை உய்விக்கும் தலைவர்களாகத் திகழ்கிறார்கள். அமரர் அந்திரேசுப் பிள்ளை ஓர் இலட்சிய புருடராகவே எம் மத்தியில் வாழ்ந்தார். அவர் ஆயிரத்தில் ஒருவர்: ஆம் முப்பது வருடங்கள்- ஒரு தலைமுறை காலமாக எம்முடன் நெருங்கிப் பழகிய அரிய நண்பரைப் பற்றி அடியேனது திர்க்கமான முடிவு இதுவே! 'செல்லத்துரை' என அவர் செல்லமாக அழைக்கப்பட்டதற்கும் நிறைந்த பொருள் உண்டு.

அமரரது சொல்லும் செயலும் ஒன்றே; உடையும் நடையும் ஒன்றே; வெள்ளை உள்ளத்தைப் பிரதிபலிக்கும் தூய வெள்ளை உடையே அவரது நிரந்தர ஆடை. கார்மேனியரெனினும் அடிக்கடி பளிச்சென்று மின்னும் பல்லொளி மிளிரும் அவர் முகத்தினழகை எம்மால் மறக்கவே முடியாது. உடைந்த மனம் அவரிடம் இல்லை. துன்பங்களில் புடமிடப்பட்டவரானாலும், 'படைத்தவன் இந்தப்படி ஆகட்டும்' என்ற அமைதி இன்பம் கண்ட, புதிய ஏற்பாட்டின் 'யோபு மகாத்மா'. சாத்தானின் சேட்டைகளுக்குத் தலை வணங்கா மன்னன். திருமறை ஆயர்கள் அடியார்களின் ஆப்த நண்பர். தம் வாழ்க்கை அனுபவத்தின் அடிப்படையில் தாமே எழுதிய 'அன்பு நிறைந்த தந்தாய்...' என்ற இரங்கல் பஜனைச் செபம், கடவுள் மேல் அவருக்கிருந்த விசுவாசத்துக்கும், உழுவலன்புக்கும் ஒரு கட்டளைக் கல்லாகும்.

தமிழ் இனத்துக்காக, 'மலையே வா, தலையே சுக' என்று தலை நிமிர்ந்து நின்ற வீர மறவன். உண்மைத் தமிழ்த் தலைவர்களுடன் என்றும் ஒன்றிவாழ்ந்து தன்னையே ஈந்த தானைத் தலைவன். இவரது இலட்சிய வாழ்வு 'தமிழ் வீர உணர்ச்சி' மண்புக்கு மாயாமல் தழைத்தோங்க உதவியதென்றால் அது உண்மையிலும் உண்மையே. சமூகத்துக்காக வாழ்ந்த சமூகசோதி; ஏழை எளியோருக்கும் தரும தானங்களுக்கும் வரையாது வழங்கிய வள்ளல். மரியாளின் தாசனாய்ப் பணியாற்றிய 'மரியாயின் சேனை' ஊழியன்.

குடும்பக் கட்டுப்பாட்டை அரைக்காசுக்கும் மதியாத இல்லறத்தாரின் ஒளி விளக்கு. பதினைந்து பிள்ளைச் செல்வங்களைப் பயந்து நன்னெறியில் வளர்த்த நற்றந்தை. தனக்குரிய இலட்சியப் போக்கில் அத்தனை பிள்ளைகளின் பெயர்களையும் 'தாசன்', 'ஜெயம்' என்ற இரண்டு ஈற்றுச் சொற்களுள் அடக்கிய அறிஞன். அமரரின் ஆறு மகன்மாருக்கும் ஆசிரியனாகப் பணியாற்றக் கிடைத்தது எனது பாக்கியமே.

"தக்கார் தகவிலரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப் படும்"

"தந்தை எவ்வழி, தனயன் அவ்வழி" என்றபடி, அவரது மகன் அமரர் விமலதாசன் ஓர் இலட்சிய வீரர் வரிசைக்குரியவர். மனித மாண்பையும், தமிழினத்தின் உரிமையையும் காக்க உழைத்த மாணவ மணியை 24-07-1983 அதிகாலை ஆணவங் கொண்ட அரச இராணுவம் சுட்டழித்தமை எம்மனோருக்கு அளக்கலாப் பேரிழப்பே. இங்ஙனம் இரண்டு இலட்சியவாதிகளையும் சமூகத்துக்குப் புலப்படுத்த எனக்கு ஒரு வாய்ப்பை அளித்த செல்வன் தேவதாசனுக்கு எனது நன்றி உரித்தாகுக.

எம்மை விட்டு மறைந்த தந்தை, தனயன் இருவருடையவும் ஆன்மாக்கள் இறைவனடி நீடுவாழப் பிரார்த்தித்து நினைவஞ்சலி செலுத்தி நிற்கின்றேன்.

வணக்கம்.
அமரர் வித்துவான்
அ. சந்தியாப்பிள்ளை
இளவாலை.

## முழுமையான விடுதலை நோக்கி

தமிழன் ஒருவன், அவன் தமிழன் என்ற காரணத்துக்காக இத்தீவிலே தனிப்பட்ட பிரச்சினைகளை எதிர் நோக்குகிறான், என்பதை நாம் கூறித்தான் தெரியவேண்டுமென்பதில்லை. இந்தப் பிரச்சினைகளுக்குச் சரியான தீர்வு எது என்பதிலேதான் பலதரப்பட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. தமிழனைத் தமிழன் ஆண்டால் பிரச்சினை தீருமென்பார் ஒருவர். தமிழனைத் தமிழன் ஆள்வதால் பிரச்சினை தீர்ந்து விடாது. ஐக்கிய இலங்கையே சரியான தீர்வென்பார் மற்றவர்.

தமிழ் மகனொருவனுக்கு தனிப் பிரச்சினைகள் இருப்பதற்குஅடிப்படைக் காரணமென்ன? எமது தனித்துவத்தைப் பேணுவதாயின், நாம் போராட வேண்டியது எதற்கெதிராக என்பதை நோக்குவோமாயின், சிங்கள ஆக்கிரமிப்பிலிருந்து எமது இனத்தைப் பாதுகாப்பதற்கு ஒரே வழி இழந்த எமது நாட்டை மீளப் பெறுவது தான் என்பது தெளிவு. தமிழ் ஈழத்தின் சிறிலங்காவின் இராணுவம், கடற்படை, ஆகாயப் படை என்பன முகாமிட்டிருப்பதும், தமிழ் மக்களுக்குத் தனிப் பிரச்சினைகள் இருந்து கொண்டிருப்பதும், அப் பிரச்சினைகளுக்காகப் போராட முனைபவர்களை சிறிலங்காவின் படைகளால் அடித்து நொருக்கப்பட்டுக் கொண்டிருப்பதும், தூர தேச அந்நியரால் கைப்பற்றப்பட்டுத் தம்வசம் ஒப்புவிக்கப்பட்டிருக்கும் தமிழ் ஈழத்தவரைச் சுதந்திரமாக வாழவிடுவதற்குச் சிங்கள மக்கள் தயாரில்லை என்பதைத் தவிர வேறெதையும் காட்டவில்லை. எனவே சிங்கள ஆக்கிரமிப்பிலிருந்து விடுபட எமக்குள்ள ஒரே வழி எமது நாட்டை மீளப் பெறுவது தான்.

ஆனால், தமிழனைத் தமிழன் ஆள்வதால் பிரச்சினை தீர்ந்து விடாது என்ற கூற்றில் உண்மை இல்லாமலில்லை. தமிழனைத் தமிழன் ஆள்வதால் மட்டும் அதாவது வெறும் அரசியல் கைமாற்றத்தால் மட்டும் தமிழனின் பிரச்சினைகள் தீர்ந்துவிடப் போவதில்லை. தமிழ்ச் சமூகத்திலே புரையோடிப் போய்க் கிடக்கின்ற சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு, தமிழனைத் தமிழன் எவ்வாறு ஆள்கிறான் என்பதிலே தான் தங்கியிருக்கிறது.

ஆயிரம் சாதி சொல்லி தமிழன் தன்னுள் பிரிந்து நிற்பதற்கும் மற்றும் பல சமூக ஏற்றத் தாழ்வுக்கும் காரணமான நிலப்பிரபுத்துவ முதலாளித்துவ அமைப்பு முறைகள் தகர்க்கப்பட்டு உலக சோசலிஷ நாடுகள் காட்டி நிற்கும் வழியிலே, தமிழீழம் புனரமைக்கப்படுவது தான், தமிழினத்தின் பிரச்சினைகளுக்கு ஒரே தீர்வு. சுருங்கக் கூறின்,

அரசியல் சுதந்திரம்
பொருளாதார சமத்துவம்
சமூக சகோதரத்துவம்

என்பவற்றை உள்ளடக்கியதாகிய விடுதலை ஒன்றே எம் இனத்தின் தனித்துவம் பேணப்படுவதற்கான வழி. எனவே சிந்திக்கத் தெரிந்த சந்ததியைச் சேர்ந்த மாணவ சமூகம் வெறும் அரசியல்கைமாற்றத்துக்காகபோராடாமல், இன விடுதலைக்காகப் போராடத் தயாராகட்டும், பச்சோந்திகள் தூக்கியெறியப்படட்டும். விடுதலை ஒன்றே நம் இலக்காகட்டும்,

"ஈழத் தமிழ் மக்களது போராட்டமானது, உலகளாவிய ரீதியில் மனிதன் மனிதனாக வாழ்வதற்கு நடத்தும் போராட்டத்தின் ஓர் அம்சமே."

(26687)

---

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
இலங்கை.

**விஞ்ஞானமாணி (விவசாயம்) பட்டப்படிப்பு கல்வியாண்டு 1992/93**

மேற்படி பட்டப்படிப்பு அனுமதிக்கான விண்ணப்பங்கள் தகுதியுடையவர்களிடமிருந்து எதிர்வரும் 1993 ஆகஸ்ட் மாதம் 16ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்,

அனுமதிக்கான நிபந்தனைகள்:

1. வயது
விண்ணப்பதாரி 1993 ஆகஸ்ட் 16ஆம் திகதியன்று 45 வயதிற்கு குறைந்தவராக இருத்தல் வேண்டும்.

2. கல்வித்தகைமைகள்
க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் கீழ்க் குறிப்பிட்ட பாடங்களில், ஒரே முறையில் குறைந்தது 3 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

1. தாவரவியல்
2. விலங்கியல்
3. இரசாயனவியல்
4. பௌதீகவியல்
5. விவசாயம்

அல்லது

பல்கலைக்கழக பீடச் சபையினாலும், மூதவையினாலும் அங்கீகரிக்கப்பட்ட பிற கல்வித் தகைமைகள்.

அத்துடன்

1. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் இரண்டு வருடத்திற்குக் குறையாத விவசாய டிப்ளோமா நெறியினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. டிப்ளோமாப் பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்த பின்னர் விவசாயத்துறையில் 5 வருட அனுபவமும், குறைந்தது நடுத்தர தொழில்நுட்ப தரத்தையும் அடைந்திருத்தல் வேண்டும்.
3. பயிற்சிக்காலம்: 4 வருடங்கள்

அனுமதி எழுத்துப் பரீட்சை மூலமும், வாய்மொழிப் பரீட்சை மூலமும் வழங்கப்படும். 1993 செப்டம்பர் மாதம் நடைபெற இருக்கும் எழுத்துப் பரீட்சைத் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

யாழ். பல்கலைக்கழக உதவிப் பதிவாளரிடமிருந்தும்(பரீட்சைக் கிளை)பதில் உதவிப்பதிவாளர்/விவசாய பீடம், கிளிநொச்சி அவர்களிடமிருந்தும் பெறப்படும் மேலதிக விபரங்களுடன் கூடிய விண்ணப்பப்படிவங்களில் மட்டுமே விண்ணப்பித்தல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்துதல் வேண்டும். தபால் மூலமாக விண்ணப்பப்படிவங்களைப்பெற விரும்புவோர், யாழ். பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட காசுக்கட்டளை/தபாற்கட்டளையை சுயவிலாசமிடப்பட்ட முத்திரையிடப்பட்ட 23x10 cm. அளவிலான கடித உறையை அனுப்புதல் வேண்டும். குறித்த விண்ணப்பப்படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்களே ஏற்றுக் கொள்ளப்படும்,

பதிவாளர்.
(சி-5503)

---

விதித்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ கோயில் வீதி — யாழ். நகர் பாதைக்குப் பதிலாக சிவன் வீதிச் சந்தியால் பலாலி வீதிக்கு.

★ யாழ். நகர் — பருத்தித்துறை வீதியைப் பாவிப்பவர்கள் ஆனைப்பந்தி சந்தியில் இருந்து நாவலர் வீதி, கச்சேரி - நல்லூர் வீதி ஆகியவை ஊடாக.

— இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

---

உ

# பூங்காவன விஞ்ஞாபனம்

ஆவரங்கால்
அருள்மிகு ஸ்ரீநடராச இராமலிங்கசுவாமி
சமேத பர்வதபத்தினி அம்மன்
**தேவஸ்தானம்**

இன்று 24-7-93 சனிக்கிழமை மாலை 5 மணி
மேளக்கச்சேரி
இராமையா குழுவினர்
ஈழத்தின் தலைசிறந்த தவில், நாதஸ்வரக் கலைஞர்கள் பங்குபற்றும் கச்சேரி

| | |
|---|---|
| N.K. பத்மநாதன் | R. புண்ணியமூர்த்தி |
| S.S. சிதம்பரநாதன் | K. நித்தியானந்தம் |
| P. நாகேந்திரன் | T. உதயசங்கர் |
| R. கேதீஸ்வரன் | P. முருகதாஸ் |

அகில இலங்கை கம்பன் கழகம் வழங்கும்

★ பட்டிமன்றம் ★

தியாகத் தம்பியர் பெரிதும் வாய்த்தது
தருமனுக்கா? இராமனுக்கா?

நடுவர்: இ. ஜெயராஜ் (கம்பன்கழக அமைப்பாளர்)

(26662) - திருவிழா உபயகாரர்

---

ஊரெழு ஸ்ரீமனோன்மணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு

# சைவாலய முன்னேற்றக் கழகம்

நடத்திய

## சமய அறிவுப் போட்டிக்கான பரிசளிப்பு நிகழ்ச்சி

தலைமை:- திரு. சி. பாலசுப்பிரமணியம் (போஷகர், சை. மு. கழகம்)
பிரதம விருந்தினர்:- திரு. சி. வேலாயுதபிள்ளை (பிரதிக் கல்விப் பணிப்பாளர்)
இடம்:- ஊரெழு ஸ்ரீ மனோன்மணி -அம்மன் ஆலயம்
காலம்:- 24-07-1993 சனி 7-00 மணி (பூங்காவனத் திருவிழா)
பரிசு விவரம்:- தங்கப் பதக்கம் செல்வன். இ. உமாகஜன் (728)

### ஏனைய பரிசில்கள்

| | | |
|---|---|---|
| செல்வன் | செ. பிரதீபன் | (825) |
| செல்வன் | ப. விக்கினராஜன் | (30) |
| செல்வி | நா. யோகேஸ்வரி | (220) |
| செல்வி | க. துஷியந்தி | (192) |
| செல்வி | ச. விஜயானந்தி | (12) |
| செல்வன் | வ. கினேசன் | (993) |
| செல்வன் | கே. ஆதித்தன் | (638) |
| செல்வி | ஜெ. ஜெசிதா | (51) |
| செல்வன் | தி. பிரஷாந்தன் | (791) |
| செல்வி | ஏ. வித்தியா | (748) |

[வினாக்களுக்கான சரியான விடைகள் நிகழ்ச்சியின்போது அறியத்தரப்படும்]

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

சைவாலய
முன்னேற்றக் கழகத்தினர்

ஊரெழு. (26664)

---

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 12 | 20 |
| — | — |
| 12 | 08 |
| — | — |
| 1934 | 1988 |

அமரர்
**செல்லப்பா சின்னத்தம்பி**
(மின்சார இயந்திர இயக்குநர்)
திதி: 24—7—1993

ஓடி மறைந்தன ஆண்டு ஐந்தாயினும் உங்கள் பாசத்தை மறக்க முடியாது தவிக்கின்றோம். திவசம் கதிரமலைச் சிவன் கோவிலில் நடைபெறும்.

உங்கள் மறைவால் துயருறும்
மனைவி, மருமக்கள், பெறாமக்கள்,
சகோதரர்கள், மற்றும் உறவினர்.

(6606)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதியோர் இல்லம்

இளம் வயதில் சுறுசுறுப்பாக பணியாற்றி...
வயது முதிர்ந்த வேளையில் எவரது
உதவியுமின்றி தனிமையில் தவிக்கிறீர்களா?

உங்களுக்காக அமைதியான சூழலில் புத்தூர்
வைத்திய சாலைக்கு அருகாமையில்,

முதியோர் இல்லமொன்றை
ஆரம்பிக்கிறோம்.

பெயர், விலாசம், வயது, தங்களால் மாதாந்தம் கொடுக்கக் கூடிய தொகை ஆகியவற்றை குறிப்பிட்டு 30-07-93க்கு பிந்தாமல் விண்ணப்பியுங்கள். தனியானவர்களும், தம்பதிகளும் விண்ணப்பிக்கலாம்.

## மெதடிஸ்த திருச்சபை புனர்வாழ்வு பகுதி

சி. எல். எஸ். புத்தகசாலை,
570, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(இ-5608)

உ

நல்லூர் உற்சவகால

## தொடர் இசைப்பேருரை

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின்
ஆதரவில்

நல்லூர் உற்சவகாலத்தில் தினந்தோறும்
ஆதீன குருமூர்த்தி மண்டபத்தில்
பி. ப. 4.00 மணி — 5.15 மணி வரை

### கந்தபுராண

தொடர் இசைப்பேருரை இடம்பெறும்

நிகழ்த்துபவர்:

திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின்
பிரதம சிஷ்யன்

கதாகாலேட்சப
வாரிதி, இசைமணி,
இசையரசு,
செஞ்சொற் செல்வன்
பிரசங்கபூஷணம்



சுழிபுரம்

### நடேசன் சிவசண்முகமூர்த்தி

B. A. Dip.-in Ed.
ஆசிரியர்
(சுழிபுரம்
விக்ரோறியாக் கல்லூரி)

விளம்பர அன்பளிப்பு:
ஆறுமுகம் சிற்பாலயம்,
திருநெல்வேலி.

(26651)

உ

யாழ். திருவண்ணைநகர்

அருள்மிகு தையல்நாயகி

## திருவூஞ்சல் விஞ்ஞாபனம்

எழில் பொங்கும் ஈழத்தின் அருள்மிகு தையல்
நாயகியாய்
தொழில் கொள்ளும் மானிடர் தொழுதேற்றும்
தேவியென
முகில் வண்ணன் முறைகாணும் முத்துமாரித் தங்கையென
பொழில் சூழ்ந்த திருவண்ணைநகர் உறைபவளே!

தங்க நிறச் சுந்தரியாய் தமிழ் விஞ்சும் அம்பிகையாய்
அங்கமெலாம் அரவணிந்த ஆதிசிவன் பாதியென
குங்கும பொட்டோடு குமின் சிரிப்போடு
எங்கும் நிறைந்து எம்மை காப்பவளே!

நிகழ்ச்சிகள்:

காலம் 24 - 07 - 93 சனிக்கிழமை

மாலை 4.00மணி - சிறப்புநிகழ்ச்சி

### மங்கள இசை

ஈழத்தின் தலைசிறந்த நாதஸ்வர தவில் வித்வான்களின்
சிறப்புக்கச்சேரி

மாலை 6.00 மணி - வசந்தமண்டப பூசை

மாலை 6.30 மணி - திருவூஞ்சல்
(வர்ண ராமேஸ்வரன்)

மாலை 7.00 மணி - பூந்தண்டிகையில் அம்பாள்
உள் வீதி வலம் வருதல்

விழா உபயகாரர்
க. தர்மகுலசிங்கம்

(சி/5617)

# ஜேர்மனியின் உதவித் திட்டத்தின் கீழ் நடைபெறும் புனரமைப்பு வேலைகளுக்கு பொருள்கள் எடுத்து வர தடை

யாழ்ப்பாணம், ஜூலை 24

ஜேர்மன் குடியரசின் உதவித் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் புனரமைப்பு வேலைகளுக்கு தேவையான சிமெந்து, இரும்பு, அஸ்பெஸ்டஸ் சீற் ஆகியவற்றை இங்கு எடுத்துவர அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

கடந்த 15ஆம் திகதி தம்மைச் சந்தித்த யாழ். அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகளிடம் கட்டுப்படை தளகர்த்தர் ஹமில்டன் வணசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜேர்மன் குடியரசு யாழ். மாவட்டத்தில் உள்ள அகதி முகாம்களை புனரமைக்க நிதி வழங்கியுள்ளதாகவும் — அந்நிதியில் இருந்து அகதி முகாம்களை திருத்த சிமெந்து, இரும்பு, சீற் போன்ற கட்டடப் பொருள்களை எடுத்துச் செல்ல அனுமதி தருமாறும் — கொழும்பு சென்ற குழு கேட்டுக் கொண்டது.

அந்தப் பொருள்களை எடுத்துச் செல்ல அனுமதி வழங்க முடியாது என்றும் — ஏனைய பொருள்களை எடுத்துச் செல்ல அனுமதிக்க முடியும் என்றும் — தளபதி ஹமில்டன் வணசிங்கா அவர்களிடம் தெரிவித்தார்.

(த-3)

## ஆலயங்களில்

கோப்பாய் பலாலை கண்ணகை அம்மன் கோவில், மீசாலை வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோவில், தாவடி அம்பலவாண கந்தசுவாமி கோயில், கன்னாதிட்டி காளி அம்மன் கோயில், அராலி கரைப்பிட்டி விநாயகர் கோயில் ஆகியவற்றின் வருடாந்தத் திருவிழா இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தேர்த்திருவிழா ஆகஸ்ட் 1ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும், தீர்த்தத் திருவிழா மறுநாள் திங்கட்கிழமையும் நடைபெறும்.

(க-117-161)

o o o

ஏழாலை மேற்கு மடாலய கருணாகரப் பிள்ளையார் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 5 மணிக்கு நால்வர் அபிஷேகமும், மாலை 5 மணிக்கு நால்வர் விழாவும் தொடர்ந்து பெரிய புராண படனமும் நடைபெறும்.

(க-45)

o o o

கொழும்புத்துறை ஆத்தியம்பதி சந்திரசேகரர் விநாயகர் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 108 சங்காபிஷேகம் நடைபெறும்.

[க-30]

o o o

சிறுப்பிட்டி தனகலட்டி திருவருள்மிகு செல்லப்பிள்ளையார் ஆலய மண்டலாபிஷேக பூர்த்தி விழா இன்று சனிக்கிழமை நடைபெறுகிறது.

முற்பகல் நடைபெறும் விசேட அபிஷேக பூசைகளைத் தொடர்ந்து மண்டலாபிஷேக நாட்களின் தெய்வீகப் பேருரைகள் ஆற்றிய அறிஞர்கள் அனைவரும் பாராட்டி கௌரவிக்கப்படுவர்.

அந்த நிகழ்வில் பருத்தித்துறை சாரதா சேவாச்சிரமத்தைச் சேர்ந்த சுவாமி சித்ரூபானந்தா அருளுரை நிகழ்த்துவார்.

(அ)

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையில் பத்திரிகையாளர் பயிற்சி, சமூக நலனும் சமுதாய சேவையும் பயிற்சி, உதவித் தாதிப் பயிற்சி, தட்டச்சு சுருக்கெழுத்துப் பயிற்சி ஆகியவற்றைப் பயின்று சித்தியடைந்த மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று சனி பிற்பகல் 5 மணிக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைத் தலைமையலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

(அ)

## NEW ENGLISH ACADEMY

ஆரியகுளம்,
யாழ்ப்பாணம்.

★ G. C. E. O/L
(1993 Dec.)
(ஆங்கில / கணித மீட்டல் வகுப்புகள்)

★ Spoken English
With Grammar

புதிய பிரிவுகள்
ஆரம்பம்:
25-07-1993
(ஞாயிறு)

★ நேரடியாக நேரில் பெற்றுக் கொள்ளவும்.

(இ-5619)

# 31ஆம் நாள் நினைவும் நெஞ்சுருகும் கண்ணீர் அஞ்சலியும்



மண்ணுலகு:
16-12-1959

●

விண்ணுலகு:
24-06-1993

## அமரர் ஏகாம்பரம் குருமூர்த்தி

(சைக்கிள் கடை உரிமையாளர் வேலணை, வங்களாவடி)

தீவகத்தில்!
பள்ளிப் படிப்பினிலே கலைநிகழ்ச்சியால் கவர்ந்தாய்
தந்தையின் இழப்பால் பாரத்தை சுமந்தாய்
நேர்மையின் திறனால் தொழிலில் சிறந்தாய்
தம்பியரின் அழைப்பால் உதவிபல செய்தாய்
உதவியின் பயனால் குருவை தேடி
அடைத்தானோ சிறையில் இந்தியன் என்றாலும்
பாசமுடன் கண்ணகியின் இடத்தினிலே
கலாவைக் கரம்பிடித்த கலகலப்பாய் இருந்தாயே
செல்வ மகளைக் கொஞ்சி மகிழ்ந்தாய்
பார்த்துப் பேசிக் கொண்டிருக்க அத்தான்
கொஞ்சு என்று கேட்டு இதயம் நின்றதோ
தாங்கும் வரை தாங்கிவிட்டு சாந்தாயோ ஐயா!

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளை, உறவினர்.

கண்ணகி அம்மன் கோவிலடி,
மட்டுவில்,
சாவகச்சேரி.

(26654)

# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
19
—
12
—
1946

உதிர்வு:
24
—
07
—
1983

## நாகலிங்கம் சிவலிங்கம்

(குவான்ரிற்றி சேவையர் - டுபாய்)

ஆண்டுகள் பத்து சென்றாலும்
ஆறாது உங்கள் நினைவலைகள்,
தூண்டாச் சுடரொளியாய் - எம்
உணர்வில் என்றும் நிலைத்திருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்;
அன்பு மனைவி, மகன், மகள்,
உறவினர்கள்.

16, பழம் வீதி,
சுந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(26639)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புதிய இரும்பில் செய்யப்பட்ட கடைக்குரிய சுருக்குக் கேற்றுகள் நான்கு விற்பனைக்குண்டு. உயரம் 8 அடி, நீளம் 15 அடி ஒன்றும், உயரம் 8 அடி, நீளம் 10 அடி ஒன்றும், உயரம் 8 அடி, நீளம் 6 அடியில் இரண்டு கேற்றுக்களும். தொடர்பு: சு. கோபாலபிள்ளை, 63/3, கிழக்கு ஒழுங்கை, கச்சேரியடி. (26642)

நிலைகதவு - யன்னலும் கதவுகளும், திராந்தி, சுவர் மணிக்கூடு, ஒரு மேசையும் உண்டு. தொடர்பு: ஆ. கனகசபாபதி, மே/பா வே. செல்லத்துரை, நாகலிங்க சுவாமிகள் வீதி, சங்கானை. (26620)

### உடன் விற்பனைக்கு

பத்து நாட்கள் வளர்ச்சி அடைந்த புறொயிலர் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. "மல்லிகாபதி", மானிப்பாய். (26629)

### தேவை

யாழ். நகரில் கற்பிக்கும் ஆசிரியர் குடும்பத்திற்கு யாழ். நகர் சுற்றுப்புறத்தில் சிறிய வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: இல. 544, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (26611)

5 வருட அனுபவமுள்ள பக்கம் கட்டுபவர், பைண்டர், அச்சுக்கோப்பவர் (பெண்) தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும்: ஏ. எஸ். ஜே. பிறின்ரிங் வேக்ஸ், மல்லாகம். (6604)

புதிதாக ஆரம்பிக்கும் குளிர்பானசாலைக்கு பெண் காசாளர், பில் போடுபவர், சப்பிளை செய்பவர்கள், உதவி சிறுபையனும் இதிலே அனுபவமுள்ள பங்காளரும், வீருடியோ வேலைகள் தெரிந்தவரும் தேவை. நியூ சித்திரகலா வீருடியோ, சுன்னாகம். (6603)

### மிருதங்கம்

மிருதங்கம் ஒரு கிழமைக்குள் நல்ல முறையில் முழு வேலையும் செய்து உத்தரவாதத்துடன் கொடுக்கப்படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார், பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (26619)

### ஆனந்தம்

சியாக்காய்ப் பவுடர் சித்த மருத்துவ முறைப்படி சியாக்காய், பழை, வேந்தயம் உட்பட மூலிகைகளும் சேர்த்து தயாரிக்கப்பட்டது. கண் குளிர்ச்சி, கூந்தல் வளர்ச்சி சுகமான வாழ்வுக்கு ஆனந்தம் சியாக்காய்ப் பவுடர் பாவியுங்கள். மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்குமிடங்கள்: ஸ்ரீ விக்னேஸ்வரா களஞ்சியம், கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-5612)

### மணமகள் தேவை

யாழ். இந்து, 33 வயது, 4இல் செவ்வாய் உள்ள வங்கி உத்தியோகத்தருக்கு படித்த, அழகிய மணப்பெண் தேவை. உத்தியோகம் பார்ப்பவர்களும் விரும்பத்தக்கது. பூரண விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்: 912, மே/பா உதயன். (சி-5616)

### புலமைப் பரிசில் பரீட்சை

Bond கல்வி நிறுவனத்தால் ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப்படும் ஆண்டு - 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரிப் பயிற்சி வினாத்தாள்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை, கம்பிகள் புத்தகசாலை- யாழ்ப்பாணம் S. K. சாமி- நெல்லியடி, மகிழ் கு- சாவகச்சேரி ஆகிய இடங்களில் பெற்றுக்கொள்ளலாம். (6866)

### ஆங்கிலக் கல்வி

இலைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து எத்தகைய அறிவு மட்டம் வரைக்கும் என்றாலும் தனிப்பட்ட முறையிலும் வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும். 804, மானிப்பாய் றோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (6358)

---

# கலை, வர்த்தக கல்லூரி

## C. C. A.

வெலிங்டன் சந்திக்கு அருகில், யாழ்ப்பாணம்.

## A/L 94

மீட்டல் வகுப்பு

ஆசிரியர் குழு:

பொருளியல் —
திரு. உதயன் 3 - 4
கணக்கியல் —
திரு. ஸ்ரீ 12 - 1
வர்த்தகம் —
திரு. ரட்ணம் 1 - 2
அளவையியல் —
திரு சுகந்தன் 2 - 3
புவியியல் —
திரு. வேலா 10 - 11
இந்துநாகரிகம் —
திரு. ஜோதீஸ்வரன் 11-12
தமிழ் —
திரு. தங்கராஜா 2 - 3
அரசியல் —
திரு. பஞ்சு 10 11
கிறிஸ்தவம் —
திரு. விமலதாஸ் 11 - 12

ஆரம்பம்:
24 — 07 — 1993

## A/L 95

புதிய அலகுகளுடன் ஆரம்பம்.

ஆரம்பம்:
24 — 07 — 1993

—நிர்வாகி

(சி/5614)

---

# LEASE OR SALE

Established Medical Practice For Sale or Lease in Jaffna. Doctor Retiring For Health Reason.

Apply:
No 545, C/O UTHAYAN,
JAFFNA.

(26618)

---

# அறிவித்தல்

சங்கானை கிழக்கு இளங்கதிர் இளைஞர் விளையாட்டுக்கழக வளர்ச்சி நிதிக்காக 25-7-93 அதிஷ்டம் பார்க்கப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் 29-8-93 ஆம் திகதி பி. ப. 5 மணிக்கு அதிர்ஷ்டம் பார்க்கப்படும் என்பதனை அறியத் தருகின்றோம்.

நிர்வாகிகள்,
இளங்கதிர் இளைஞர் விளையாட்டுக்கழகம்,
சங்கானை.

(6365)

---

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்
நடத்தவிருக்கும்

# மாபெரும் பொது அறிவுப் போட்டி-1993

புரட்டாதி மாதத்தில் இடம்பெறும்.

விண்ணப்பப் படிவங்கள் சகல பாடசாலைகளிலும் கிடைக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. அவற்றை எமது தலைமைச் செயலகத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு முகவரி:

★ 33, மருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்,

★ 52, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-5611)

---

# BECON

## கல்வி நிறுவனம்

STANLEY ROAD, JAFFNA.

## 94 A/L

விஞ்ஞான துரித மீட்டல் வகுப்புகள்
(பயிற்சி பரீட்சையுடன் கூடிய அலகு ரீதியான மீட்டல்)

சனி - ஞாயிறு

| நேரம் | பாடம் | ஆசிரியர் |
|---|---|---|
| 10-00 — 11-00 / 3-00 — 4-00 | விலங்கியல் | திரு. கெங்காதரன் |
| 11-00 — 12-00 / 2-00 — 3-00 | தாவரவியல் | திரு. செல்வநேசன் |
| 12-00 — 1-00 | இரசாயனம் | திரு. தில்லை |
| 1-00 — 2-00 | பௌதிகம் | திரு. வர்ணம் |
| 10-00 — 12-00 | தூய/பிரயோக கணிதம் | திரு. கிருஷ்ணா |

வினா - விடை நேர விபரம்:

பௌதிகம் இரசாயனம் — செவ்வாய் 3-00 — 4-00
தாவரவியல் விலங்கியல் — செவ்வாய் 4-00 — 5-00
தூய/பிரயோக கணிதம் — வியாழன் 3-00 — 4-00


ஆரம்பம்: 01 - 08 - 1993
ஞாயிறு காலை 10-0)

(சி-5604)

---

# 2ஆவது பிறந்ததின வாழ்த்து

(24 – 07 – 1993)



## ★ செல்வன் சிவலிங்கம் பசீலன் ★

கரவெட்டி மேற்கு ஸ்ரீ நாரதவித்தியாலய வீதியில் வசிக்கும் சிவலிங்கம்-அமுதமலர் தம்பதிகளின் செல்வப் புதல்வன் பசீலன் தனது 2ஆவது பிறந்த தினத்தை இன்று 24-7-93 தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, தங்கை-துஷியந்தி, அப்பப்பா, அப்பம்மா அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பா, அன்ரி, சித்தப்பா, சித்திமார், பிரான்ஸில் வசிக்கும் பெரிய அங்கிள், சவுதியில் வசிக்கும் குகா அங்கிள், அண்ணா, அக்கா, மச்சான், மச்சாள்மார், மாமா, அத்தைமார், பாட்டிமார், பூட்டிமார், உற்றார், உறவினர்கள் அனைவரும் பல்கலைகளிலும் தேர்ச்சி பெற்று, வல்லிபுர ஆழ்வார் அருளால் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள். (26646)

---

# 3ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்: 04 — 09 — 1932



மறைவு: 28 — 07 — 1990

## அமரர் நடராசா துரைச்சாமி

திதி: 24 — 7 — 1993

ஆடி பிறந்ததென்று ஆனந்தம் நாம் கொள்ள
பாடித் திரிந்த என்தந்தை பரலோகம்-
சென்றதென்ன?
தேடித் திரிகின்றோம் அன்பான உள்ளங்கள் நாம்
ஆசைக்கொருதரம் அப்பா என அழைத்திடவே
ஈசன் பாதம் நோக்கி எம் தெய்வம் சென்றதனால்
பாசக் கண்ணீரை பகிர்கின்றோம் பலநூறு-
நினைவிற்காய்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, மகள்.

66/9, இந்துமகளிர் ஒழுங்கை,
சுந்தர்மடம்.

(26684)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மதிமயங்கியோருக்கு தத்துவம் புரியுமா?

பலம் வாய்ந்த விடுதலைப் புலிகளை அடக்கி ஒடுக்குவது என்பது முடியாத காரியம்.

தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசியல் தீர்வுகள் மேற்கொள்ளப்படாத வரையில் நாடு துண்டாடப்படுவதைத் தவிர்க்க முடியாது.

இவ்வாறு யதார்த்தத்தை வெளியிட்டிருப்பவர் ஸ்ரீலங்கா விமானப்படையின் முன்னாள் தளபதி ஏயர்மார்ஷல் ஹரிகுணதிலக்கா.

முப்படைகளில் உயர் பதவிகளை வகிப்பவர்கள் தமது பதவியின் பொருட்டும், அதனைக் காப்பாற்றும் சுயநல நோக்குடனும் தமது பலவீனத்தை வெளியே சொல்வதில்லை. தம்மால் — தமது படைகளால் — இயலாதது ஒன்றுமில்லை. தங்கள் அணியினர் பலம் மிகுந்தவர்கள் வானத்தைக் கூடக் கயிறாகத் திரித்து விடுவார்கள் என்ற பொய்மைப் படத்தையே எப்போதும் அரசியல் தலைவர்களுக்குக் காட்டி வருகிறார்கள்.

அவர்களின் அந்தப் பொய்களைப் புட்டுக்காட்டும் விதத்தில், உண்மையான நிலையை எயர்மார்ஷல் ஹரிகுணதிலக்கா முன்னரும் பல தடவைகள் விளக்கினார்.

1983 கறுப்பு ஜூலை காலமான இந்த வேளையில் அவர் முப்படைகளின் பத்தாண்டு கால வளர்ச்சியை எடைபோடுகிறார். அதேபோல புலிகளின் பலத்தையும் — மனோபலத்தையும் — எடை போட்டிருக்கிறார். அந்தச் சமன்பாட்டுக் கணக்கின் விடையே அவர் மேலே கூறிய கருத்து என்பதில் சந்தேகம் இல்லை.

அவரது இந்த யதார்த்தமான முடிவை முப்படைத் தளபதிகளோ, கூட்டுப்படைத் தளகர்த்தரோ அன்றி அரச தலைவர்களோ காதில் போட்டுக் கொள்ளப்போவதில்லை.

ஆனால் இராணுவத்துக்கு வழங்கப்படும் நிதி போதாது என்ற அவரது கூற்றை மேற்கோள்காட்டி மேலும் தமக்கு நிதி தருமாறு முப்படைத் தலைவர்கள் அரசாங்கத்தைக் கேட்டால் வியப்பில்லை. யுத்தம் தொடங்கிய கடந்த மூன்று வருடங்களாக தமது தோல்விக்கு அவர்கள் நிதிவளம் போதாது என்ற காரணத்தையே காட்டிவருகிறார்கள். [அரசு எவ்வளவு அள்ளிக் கொடுத்தாலும் அதிருப்தியே அவர்களது புராணம்.]

உண்மை அதுவல்ல. இராணுவத்தின் உயர்மட்டத்திலும் சரி, அடிமட்டத்திலும் சரி மனோவலிமை, தியாக மனப்பான்மை ஆகியன இல்லை. அவை இல்லாத போது படைகளின் ஆட்கணக்கையும், ஆயுதக்கணக்கையும் பெருக்கி ஏது பலன்?

யுத்தம் நடைபெறும் மூன்று வருடங்களையும் மட்டுமன்றி கடந்த பத்து வருடங்களையும் எடுத்துக் கொண்டாலும் ஸ்ரீலங்கா படைகளால் விடுதலைப் புலிகளை ஒடுக்கமுடியவில்லை. இந்திய இராணுவத்தை உதவிக்கு அழைத்தும் இயலவில்லை. இந்தத் தோல்வியை இராணுவ உயர்பீடமும் அரசாங்கமும் உய்த்துணரும் வரை அவர்களுக்கு என்ன வளமிருந்தாலும் வெற்றியை எதிர்பார்க்கமுடியாது.

இன்னும் குறிப்பாகச் சொல்வதானால், விடுதலைப் புலிகளின் பலத்துக்கு இலட்சியப் பற்றும் மனோவலிமையுமே அடித்தளமாக உள்ளன. அந்த அடித்தளத்தை நிதிவளம், ஆயுதவளம் என்பனவற்றினால் தோற்கடிப்பது கடினம். அவை இரண்டுக்கும் முன்னால் எவையுமே நிகர் நிற்கமுடியாது.

எனவே எயர்மார்ஷல் ஹரிகுணதிலக்கா மற்றும் திரு. அட்றின் விஜேமான ஆகியோர் கூறுவதை தெற்கின் தலைவர்கள் காதில் போட வேண்டிய வேளை வந்துவிட்டது. அப்படியல்லாமல் சிங்கள மக்களின் காதில் பூ வைக்க விரும்பின் எல்லா நலன்களும் தமிழர்களுக்கே ஆகும். தர்மம் வெல்லும் போது அது தவிர்க்கமுடியாத ஒன்று. இந்தத் தத்துவம் மதிமயங்கி நிற்கும் சிங்களத் தலைவர்களுக்கு எங்கே புரியப் போகிறது!

## இன்று

சீமெந்து தொழிற்சாலையின் இன்றைய நிலை பற்றி ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று இன்று சனி காலை 9 30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும். சீமெந்து பொதுத் தொழிலாளர் யூனியன் சீமெந்துக் கூட்டுத்தாபனம் இதனை ஏற்பாடு செய்துள்ளது. (த)

o o o

வடபிராந்திய பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவனங்களின் பாலவிகாஸ் குரு பயிற்சி முகாமினால் கடந்த சித்திரை மாதம் நடத்தப்பட்ட பயிற்சியின் இறுதி நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை அல்வாய் கிழக்குதெரு மூடிமடத்தடியிலுள்ள ஸ்ரீ சத்திய சாயி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடபிராந்திய பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவனங்களின் கல்விப் பகுதிப் பதில் இணைப்பாளர் திருமதி புவனேஸ்வரி பஞ்சநாதம், யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன், டாக்டர் எம். கே. முருகானந்தன் ஆகியோர் உரையாற்றுவார்கள். (ஓ)

## ஞாயிறன்று திறந்திருக்கும்

யாழ்ப்பாணம், ஜூலை 24

சுன்னாகம் ப.நோ.கூ. சங்கக் கிளைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை திறந்திருக்கும் என பொது முகாமையாளர் அறிவித்துள்ளார்.

ஏழாவது சுற்று மண்ணெண்ணெய் மற்றும் நிவாரண விநியோகம் ஆகியவற்றை துரிதப்படுத்துவதற்காக இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## ஸ்கந்தா பழைய மாணவர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 24

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவு நடைபெறவுள்ளது.

மேற்படி தெரிவுக்கான நியமனப் பத்திரங்களையும், ஏனைய விவரங்களையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் அதிபரிடம் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

## நல்லூர் உற்சவகால நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்; ஜூலை 24

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவ காலத்தையொட்டி ஆலய சுற்றாடலில் நடைபெற இருக்கும் நிகழ்ச்சிகளில் இன்று இடம்பெறுபவை வருமாறு:-

★ நல்லை ஆதீன குருமூர்த்தி மண்டபத்தில் பிற்பகல் 2 மணி முதல் 3 மணி வரை திரு. மு. ஆறுமுகத்தின் "குமரன் வந்துதித்தான்" என்னும் பொருளில் சமயச் சொற்பொழிவு.

★ பிற்பகல் 4 மணி முதல் மாலை 5-15 மணி வரை திருமுருக கிருபானந்தவாரியாரின் பிரதம சிஷ்யனான பிரசங்கபூஷணம் த. சிவசண்முகமூர்த்தியின் கந்தபுராண தொடர் இசைப் பேருரையில் "திருக்கைலாச மகிமை" குறித்து சொற்பொழிவு.

o o o

★ நல்லூர் மேற்கு வீதி முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் சைவ மகாசபையின் ஆதரவில்கானகதா வாரிதி பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்தசர்மாவின் "மகா பாரதம்" பற்றிய தொடர் இசைச் சொற்பொழிவு நிகழ்ச்சி மாலை 5-30 மணிக்கு ஆரம்பமாகும்.

o o o

★ ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையினர், நல்லூர் ஸ்ரீமுருகன் தண்ணீர்ப் பந்தல் நிர்வாகத்தின் அனுசரணையுடன் வழங்கும் தெய்வீக இசை அரங்கு நாவலர் மணி மண்டப முன்றிலில்.

இன்றைய தெய்வீக இசை அரங்கில் திரு. கே. ஆர். சுந்தரமூர்த்தி, திரு. எம். செல்வரத்தினம் குழுவினரின் நாதஸ்வர இசை மாலை 6 மணி முதல் இடம்பெறும்.

★ இலங்கை வங்கி யாழ்ப்பாணம் மேற்தரக்கிளையினால் விசேட கருமபீடம் ஒன்று இன்று காலை 9-30 மணியளவில் நல்லூர் கந்தசுவாமி கோயிலில் அமைந்துள்ள நாவலர் மண்டபத்தில் திறக்கப்படும். இக்கரும பீடம் உற்சவகாலம் முடிவடையும் நாள் வரை திறந்திருக்கும். இலங்கைவங்கி தனது 55 ஆவது வருடத்தை எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பிப்பதை முன்னிட்டு இக்கருமபீடம் விசேடமாகத் திறக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. [அ-உ]

## விளையாட்டு நிகழ்வுகள்

அமரர் டாக்டர் எஸ். இராஜேந்திரம் ஞாபகார்த்தமாக சங்கானை ஜுபிற்றர் விளையாட்டுக்கழகம் நடத்திய மென்பந்து கிரிக்கெட் மற்றும் வலைப்பந்து சுற்றுப் போட்டிகளின் இறுதியாட்டங்களும், பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் 1 30 மணி முதல் சங்கானை பாரதி மைதானத்தில் நடைபெறும்.

கிரிக்கெட் இறுதியாட்டத்தில் யாழ். ஸ்புட்னிக் வி. க. அணியை எதிர்த்து உடுவில் சென். மேரிஸ் வி. க. "ஏ" அணி விளையாடும்.

வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் மானிப்பாய் பரிஸ் அணியை எதிர்த்து இறாஸ்கொப்பர்ஸ் அணி மோதும்.

இதனைத் தொடர்ந்து ஜுபிற்றர் பாலர் பாடசாலைப் பிள்ளைகளின் விளையாட்டுப்போட்டி இடம் பெறும்.

இந்நிகழ்வில் வலி. மேற்கு பிரதேச செயலாளர் செல்வி ரூபினி வரதராஜதுரை (?) பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

o o o

சங்கானை ப. நோ. கூ. சங்கத்தினால் நடத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பரிசில்களை வழங்கும் வைபவமும் இன்று மாலை 5.30 மணியளவில் சங்கானை ஜுபிற்றர் விளையாட்டரங்கில் நடைபெறும்.

o o o

சுன்னாகம் மயிலணி வளர்பிறை விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை சுன்னாகம் மயிலணியில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:

★ 3.30 மணி; சண்டிலிப்பாய் வசந்தசிறி வி. க எதிர் சுன்னாகம் கலைவாணி வி. க.

★ 4.30 மணி: நவாலி தென்றல் வி. க. எதிர் மயிலிட்டி ஐக்கிய வி. க. (உ)


## குறைதீர்க்க விரைவாக வா!

| | |
|---|---|
| கொடியேறும் | போதெங்கள் மிடிதீரும் படியாகக் குறைதீர்க்க விரைவாக வா |
| அடிபாடும் | இடிபாடும் அவலங்கள் இடையாக அனைத்தெம்மைக் காக்கின்ற வா |
| குடியாகத் | குடித்திழத் தமிழ் மண்ணைக் காப்போர்க்குத் துணிவான பலந்தந்துவா. |
| வடிவான | நல்லூரில் நெடிதான வேலேந்தி வளமோடு வா! கந்தவா! |

—முருகனடியான்—


## புலிகளுக்குப் பயந்து...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி) மாகிவிட்டதாக மற்றொரு செய்தியாளர் குறிப்பிட்டார்.

நேற்று ஆரம்பமான ஜனாதிபதி இடம்பெயர் சேனையில் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா, வர்த்தக அமைச்சர் ஏ. ஆர். மன்சூர், ஆகியோர் உட்பட நான்கு அமைச்சர்கள் மட்டுமே பங்குபற்றினர்.

ஜனாதிபதி, பிரதமர் பங்குபற்றாததால் இடம்பெயர் சேனை தோல்வியில் முடிவடைந்தது என பி. பி. ஸி. குறிப்பிட்டது. (உ-எ--3-6)


# கலை நிகழ்ச்சி

யாழ். வர்த்தகர் சங்கம்

சங்க வளர்ச்சிக்காக நடத்தும்

## நிதியுதவி நிகழ்ச்சி

இடம்: இளம் கலைஞர் மண்டபம்

காலம்: 31 - 7 - 1993 சனிக்கிழமை

நேரம்: மாலை 3-30 மணி முதல் இரவு 2.00 மணி வரை.

நிகழ்ச்சி நிரல்

3- 30 — 3- 45 மணிவரை தேசியக்கொடி, சங்கக்கொடி ஏற்றல்

3- 45 — 5- 00 மணிவரை மங்கள இசை

தவில்
1. என். ஆர். எஸ். ரவீந்திரன்
2. என். ஆர். எஸ். சுதாகரன்
காலஞ்சென்ற தவில் மேதை என். ஆர். சின்னராசாவின் புதல்வர்கள்.

நாதஸ்வர இசை
1. ஏ. முருகானந்தம்
2. கே. ஸ்ரீதரன்

5- 00 — 7- 00 மணிவரை பரதநாட்டியம்
1. நாட்டிய கலைமணி - செல்வன் எம். அருள்மோகன்
2. நாட்டிய கலைமணி - திருமதி சுகந்தினி தயாசீலன்

நட்டுவாங்கம்
திருமதி சாந்தினி சிவநேசன் (கொக்குவில் கலாபவனம்)

பாட்டு
எல். பத்மலிங்கம்

மிருதங்கம்
எஸ். மகேந்திரன்

வயலின்
ஆர். ராதாகிருஸ்ணன்

7- 00 — 9- 00 மணிவரை
1. தலைவர் உரை
2. வரவேற்புரை
3. மங்கள விளக்கேற்றல் (யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர்)

பிரதம விருந்தினர்
புதுவை இரத்தினதுரை
(கலை, பண்பாட்டுக்கழக பொறுப்பாளர்)

சிறப்பு விருந்தினர்

திரு. கொ. க. ஆ. க. நடராசா
(முன்னாள் வர்த்தகர் சங்க தலைவர்)

திரு. இ. வெங்கட்ராமன்
(வர்த்தக வங்கி முகாமையாளர்)

திரு. த. கோவிந்தசாமி
(வடபிராந்திய வர்த்தகர் சங்கங்களின் சமாஜத் தலைவர்)

1. மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் உரை
2. பிரதம விருந்தினர் உரை
3. சிறப்பு விருந்தினர் உரை
4. நன்றியுரை

9- 00 — 2- 00 மணிவரை

ஈழத்தின் பிரபல இசைக் குழுக்களான
"சாந்தன்", "ராஜன்ஸ்"
முதன்முறையாக
ஒரே மேடையில் இணைந்து
வழங்கும்

# இன்னிசை கானங்கள்

| | |
|---|---|
| வே. சிற்சபேசன் | நா. த. அன்னலிங்கம் |
| தலைவர் | செயலாளர் |
| ஒலி | ஒலி |
| மனோகலைற் கோப்பாய். | நித்தி சவுண்ட் யாழ்ப்பாணம். |

ரிக்கற் பெறுமிடம்: 21, நவீனசந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம்,
இளம் கலைஞர் மன்ற வாயிலில்

ரிக்கற் விவரம்:
1000/- 500/- 250/- 100/-
(ஆயிரம் ரூபா ரிக்கற்றுக்கு மட்டும் இருவர் அனுமதிக்கப்படுவர். மற்ற எல்லா ரிக்கற்றுகளுக்கும் ஒருவர் மட்டும்)

வாழ்த்துபவர்,
யோகாஸ் புடைவை மாளிகை
இல. 16B, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

(5509)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் சைவமகா சபை நடத்தும்

# தெய்வீக அருள் இசைச் சொற்பொழிவு

**காலம்:** 24-7-93 தொடக்கம் 18-8-93 வரை
**நேரம்:** மாலை 5 - 15 மணி
**இடம்:** நல்லூர் மேற்கு வீதி ஸ்ரீமுத்து விநாயகர் ஆலயம்.
**விடயம்:** 'மகாபாரதம்'



நிகழ்த்துபவர்:

நல்லை குருமணியின் பிரதம சிஷ்யன்
கானகதாவாரிதி,
இராமாயண கதா திலகம்

கந்தர்மடம்

பிரம்மஸ்ரீ சிவ
## வை. நித்தியானந்தசர்மா

அணிசெய் கலைஞர்கள்

| | | |
|---|---|---|
| கலாவித்தகர்: | K. பத்மநாதன் | வயலின் |
| வித்துவான் | S. பிச்சையப்பா | முகவீணை |
| கலா வித்தகர் | T. இராஜன் | மிருதங்கம் |
| பிரம்மஸ்ரீ | N. பாரத்வாஜன் | சுருதி |

★ அன்புடன் அனைவரையும் அழைக்கிறோம் ✱
நல்லூர் சைவமகா சபை.

(26657)

சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம்
(வ-து) சுன்னாகம்.

# தமிழ் தட்டெழுத்தாளர் பதவி வெற்றிடம்

மேற் குறிப்பிட்ட பதவிக்கு யாழ். மாவட்டத்தில் வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவி: தமிழ் தட்டெழுத்தாளர்
குறி இல. 305:13

சம்பளத் திட்டம்: 730/- — 1055/-
20 × 10; 25 × 5

இத்துடன் சங்கத்தினால் வழங்கப்படும் சகல அலவன்சுகளும் வழங்கப்படும்.

தகைமை:
க. பொ. த. (சாதாரண தரத்தில்) சம்பந்தப்பட்ட மொழியினை உள்ளடக்கியதாக ஆறு பாடங்களிலான சித்தியும், தமிழ் தட்டெழுத்தாற்றல் நிமிடத்திற்கு 20 சொற்களுக்கு குறையாமலும்.

வயது:
விண்ணப்ப முடிவு திகதியில் 18 வயதுக்கு குறையாமலும், 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி: 09 — 08 — 1993

ரூ. 10/- செலுத்தி விண்ணப்பப் படிவத்தையும், மேலதிக விபரங்களையும் வேலை நாட்களில் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

- பொது முகாமையாளர்.

சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்.
21 - 07 - 1993 (சி-2019)

# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்: 13 — 02 — 1943



அரக்கர் அழிப்பில்: 24 — 07 — 1983

## அமரர் சின்னையா சிவானந்தன்

(சதி வார்ச் வேக்ஸ் - முகாமையாளர்)

உங்கள் ஆத்மா சாந்தி அடைய கடவுளை வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்;
மனைவி, பிள்ளைகள் -
நிஷாந்தி, பிரசன்னா, சிந்துஜா,
மருமகன் -பாஸ்கரன்
(ஜீவா)

''நிஷாந்தி வாசா'',
315/5, பலாலி வீதி,
திருநெல்வேலி.

(26650)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 24-07-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ராஜீவ் கொலை வழக்கு:

# இலக்கு எம்மை நோக்கி வரும்வரை காத்திருப்போம்

## இப்படி சிவராசன் சொன்னாராம்

சென்னை, ஜூலை 24

ராஜீவ் காந்தி கொலை வழக்கின் எதிரிகளில் ஒருவரான ரவி என்றழைக்கப்படும் ரவிச்சந்திரன் கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்தின் சில பகுதிகளை அவரது வழக்கறிஞர் வீ. ராம்தாஸ் சென்னை விசேட நீதிமன்றத்தில் வாசித்தார்.

அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தமிழ்த் தேசிய மீட்புப் படைத் தலைவரான ரவிச்சந்திரன் கூறியிருந்ததாவது:

''சிவராசனின் கோரிக்கையின் படி மீனம்பாக்கம் விமான நிலையத்தில் பிரமுகர் வெளியேறும் வழி பற்றிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்தேன். அந்த இடம் சாதகமான இடம் என்று அவருக்கு தெரிவித்தேன்.''

''எனினும், அதற்கு சிவராசன் - நாம் இலக்கை நோக்கிச் செல்லக்கூடாது இலக்கு எம்மை நோக்கி வரும் வரை நாம் காத்திருப்போம்'' — என்றார்.

யார் அந்த முக்கிய பிரமுகர் என்று நான் சிவராசனைக் கேட்டேன். அதற்கு சிவராசன் அவர் பெரியபுள்ளி என்று சொன்னார். தமிழகத்தைச் சேர்ந்த தலைவரா அந்தப் புள்ளி என்று நான் கேட்டதற்கு, அதிலும் பார்க்க முக்கிய பிரமுகர் என்று சிவராசன் கூறினார். ராஜீவ்காந்தியா என்று நான் ஆச்சரியத்துடன் கேட்டேன். ஆனால் சிவராசன் அதற்கு நேரடியாகப் பதில் கூறவில்லை''—

இவ்வாறு ரவிச்சந்திரன் தனது ஒப்புதல் வாக்கு மூலத்தில் தெரிவித்திருந்தார்.

இதனைச் சுட்டிக் காட்டிய வழக்கறிஞர் ராம்தாஸ், ''அந்தக் கட்டத்திலும் சிவராசன் தனது குறி யார் என்பதை ரவிக்குத் தெரிவிக்கவில்லை. சதிச்செயல் முழுவதிலும் விடுதலைப் புலிகள் உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டம்மானோ அல்லது சிவராசனோ ராஜீவ் காந்தி தான் தங்களின் இலக்கு என்பதை தெரிவிக்கவில்லை. எனவே சதிச்செயலில் ரவி சம்பந்தப்பட்டிருக்கக்கூடும் என்று சொல்லமுடியாது''— என்று வாதாடினார். (ஒ-எ)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 24

மூளாய் இந்து இளைஞர் மன்றத்தினால் இன்றும் நாளையும் நடத்தப்படவிருந்த விளையாட்டுப் போட்டி பிற்போடப்பட்டு ஆகஸ்ட் முதலாம் இரண்டாம் திகதிகளில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

o o o

இன்று சனிக்கிழமை நடைபெறவிருந்த வடமராட்சி கிழக்கு மாமுனை செம்பியன்பற்று ஆரம்ப சுகாதாரக் கவனிப்புத் தொண்டர் பயிற்சி நிறைவு விழா ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## பாடசாலைகளில்

வட்டுக்கோட்டை அண்ணன் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் வீரபத்திரர் கோயில் முன்றிலில் நடைபெறும். [ச-175]

o o o

கலட்டி அம்மன் பாலர் பாடசாலையின் இரண்டாவது விளையாட்டு விழா இன்று பிற்பகல் 1 மணிக்கு திருமதி க. செல்வந்தி தலைமையில் கற்பக விநாயகர் கோயில் வீதி கலட்டியில் நடைபெறும்.

## கலந்துரையாடல்

சகல வீடியோ, ஓடியோ நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை காலை 10 மணிக்கு கோண்டாவிலில் உள்ள அரசியல் துறை, யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

பகைத்.. .
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
வதற்குச் செயலாற்றிய இராணுவ உயர் அதிகாரிகள் வெகு சிறப்பு அடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தங்களது திறமையைக் குறைத்துக் கணிக்கும் ஒரு நடவடிக்கையாகவே படைத் தளபதிகள் கருதுகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இராம...
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
அங்கிருந்து அவர்களை அசையக்கூடாது என எச்சரித்த பொலிஸார், ''வீதிக்கு வந்தால் சுட்டுத் தள்ளுவோம்'' என்று கொலைப் ... என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-3)

# மரண அறிவித்தல்கள்

## சபாரட்ணம் வில்சன் ஜெயராஜசிங்கம்

(காரைநகர்)

தெல்லிப்பளை வீமன்காமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், காரைநகரை வசிப்பிடமாகக் கொண்டவரும், தற்சமயம் உடுவிலில் வசித்தவருமாகிய S. W. ஜெயராஜசிங்கம் 23-7-93 அன்று காலமானார்.

இவர் கிரேஸின் ஓய்வு பெற்ற ஆசிரியை, யாழ்ற்றன் கல்லூரி) அன்புக் கணவரும், காலஞ்சென்ற றொகான் தஷ்யந்தன், மோகன் சாந்தனன், மோகன் தர்ஷாந்தனன், மரீனா ஜெயந்தி, பாமிலா தஷ்யந்தி, கவிராஜன், புவிராஜன் (யாழ்ப்பாணக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சுஜாதா, நிர்மலகுமார் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற சுரோஜன், எட்வின் நிலாந் ஆகியோரின் பேரனுமாவார்.

இவரின் நல்லடக்க ஆராதனை, டச்சு றோட், உடுவிலில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (24-07-93) காலை 10.00 மணியளவில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஜெ. புவிராஜன் (மகன்)

டச்சு றோட்,
உடுவில். (6374)

## கணபதிப்பிள்ளை இராமநாதன்

(உடுவில் கிழக்கு)

மட்டுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் உடுவிலை வதிவிடமாகக் கொண்டவருமான கணபதிப்பிள்ளை இராமநாதன் 23-07-93 வெள்ளிக்கிழமை காலமானார்.

இவர் உலகநாயகியின் அன்புக் கணவரும், லவிதாம்பிகை, தனலட்சுமி, கருணாகரன் (சவுதி), ஜெயச்சந்திரன் (செந்தி), பவானி, கிருபாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகலிங்கம், கணேசராஜன் (கோல்டன் டச், இருபாலை), செல்வகுலராசா ஆகியோரின் மாமனாரும், சின்னத்துரை, சின்னத்தம்பி, சின்னத்தங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், விவேகானந்தன், விஜயானந்தன், குகானந்தன், இந்துஜா, சயந்தவி, மிருணன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் நேற்று வெள்ளிக்கிழமை பூவோடை மயானத்தில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
ஜெயச்சந்திரன்
(மகன்)

உடுவில் கிழக்கு,
சுன்னாகம் (6608)

## நாகலிங்கம் கந்தசாமி

(அபேசிங்கா ஸ்ரோர்ஸ் - சாமியார் கடை வெள்ளவத்தை)

அராலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சுழிபுரம் கல்லை வேம்படியை வதிவிடமாகவும் கொண்டவருமாகிய நாகலிங்கம் கந்தசாமி 19 - 07 - 93 அன்று கொழும்பில் காலமானார். அன்னார் திரு. திருமதி க நாகலிங்கம் பார்ப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், திரு. திருமதி சரவணமுத்து அமுதம் (முன்னாள் இ. போ. ச டிப்போ காரைநகர்) ஆகியோரின் அன்பு மருமகனும், கெங்காதேவியின் அன்புக் கணவரும், கெங்காதரன், மனோகரன், செந்தூரன், கிருபாகரன், ஞானச்செல்வி, திருச்செல்வி, முரளிதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை இன்று (24 - 07 - 93) பி. ப 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சரவணமுத்து

கல்லை வேம்படி,
சுழிபுரம். [26665]

## மங்களேஸ்வரி சிவசுப்பிரமணியம்

திருமதி மங்களேஸ்வரி சிவசுப்பிரமணியம் நேற்று சிவபதம் அடைந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சறோஜினிதேவி மற்றும் பத்மநாதன் (செல்வின் எழுத்துத் தயாரிப்பாளர் Hot Metal), மீனலோஜினி ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி ப. பத்மாவதியின் அருமை மாமியாரும், நிர்மலச்செல்வன் (யாழ். இந்துக்கல்லூரி), அங்கயற்செல்வி (வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று நண்பகல் ஒரு மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. பத்மநாதன்
(மகன்)

28/1, ஒட்டுமடம் வீதி,
யாழ்ப்பாணம். (சி/5510)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org